DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No.417 /2025 |
| Session | ... | |
| | | Prosecution / PW-3 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.தங்கராஜா |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ. ராமச்சந்திரன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused present.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 22.01.2026

---

**முதல் விசாரணை**

1. நான் தற்போது முள்ளிமுனை கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். கடல் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 சாந்தி மற்றும் அ.சா.2 ரவீந்திரனையும் தெரியும். எனது மனைவியின் தாலிசெயின் காணாமல் போனது சம்மந்தமாக புகார்கொடுக்கப்பட்டு காவல் நிலையத்தில் விசாரணை நடைபெற்று வந்தது. இந்நிலையில் கடந்த 2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் தேதி எனக்கு சரியாக நினைவில் இல்லை காவல் நிலையத்திலிருந்து எனது மனைவியின்

தாலி கண்டுபிடித்து விட்டதாக சொன்னார்கள். நான்காவல் நிலையத்திற்கு சென்றேன். தாலி களவு போனது சம்மந்தமாக எதிரி முத்தபாவின் அண்ணன் மகனை போலிசார் விசாரித்துள்ளனர். அதனை மனதில் வைத்து கொண்டு ரவீந்திரன் சொல்லிதான் எதிரியின் அண்ணன் மகனை போலிசார் விசாரித்துள்ளனர்என்ற எண்ணத்தில் ரவீந்திரன் இருசக்கர வாகனத்தில் வெளியூர் சென்றுவிட்டு ஊருக்குள் வரும்போது பட்டாணி என்பவரின் வீட்டு அருகில் அவரின் இருசக்கர வாகனத்தை எதிரி முத்தபாவும் அவரது அண்ணன் மகன்களும் இன்னும் சில பேரும் அவரை மறித்து முத்தபா ரவீந்திரனை அடித்து விட்டார்.

2. நான் காவல் நிலையத்திற்கு திரும்பும்போது ரவீந்திரன் நின்று கொண்டிருந்தார். அவரது சட்டை கிழிந்து இருந்தது. ரவீந்திரன் என்னிடம் தன்னை முத்தபா தாக்கியதாக கூறினார். நான் ஊருக்குள் வரும்போது ஆய்வாளரும் என்னுடன் வந்தார். அவர் என்னை அங்கு இருக்க சொல்லி விட்டு ரவீந்திரனை காவல்நிலையத்திற்கு சென்று மனு கொடுக்கும் படிசொன்னார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நான் காவல் நிலையத்தில் இருந்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். காவல்நிலையத்திலிருந்து திரும்பும்போது ரவீந்திரனின் சட்டை கிழிந்து இருந்தது. உடம்பில் காயம் இருந்தது. அ.சா.1 எனது மனைவியின் அக்கா என்றால் சரிதான். ரவீந்திரன் எனது சகளை என்றால் சரிதான். ரவீந்திரன் குடும்பத்திற்கும் ஆஜர் எதிரியின் குடும்பத்திற்கும் பஞ்சாயத்து தேர்தல் தொடர்பாக முன்பிரச்சனை இருப்பதால் பேசி கொள்ளமாட்டார்கள் என்றால் சரிதான். கடந்தமுறை நடைபெற்ற பஞ்சாயத்து தேர்தலில் அ.சா.1 சாந்தியும் ஆஜர் எதிரியின் அக்கா மகளும் போட்டியிட்டனர் என்றால் சரிதான்.

2. அந்த தேர்தலில் எதிரியின் அக்கா மகள் தான் வெற்றி பெற்றார் என்றால் சரிதான். மேற்படி தேர்தலில் வெற்றி பெற்றதை மனதில் வைத்துகொண்டு ஆஜர் எதிரியை பழிவாங்கும் எண்ணத்தோடு அ.சா.1 அவர் மீது பொய் புகார் கொடுத்துள்ளார் என்றால்

சரியல்ல. நான்சொன்னவாறு சொன்னதேதியில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் அ.சா.1 எனது மனைவியின் அக்கா என்றமுறையில் அவர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.